தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.05.2013 A.M**

---

## "வங்கிக் கணக்கு வைத்திருக்கும் விவசாய பெண்களின் எண்ணிக்கை குறைவு'

வங்கிக் கணக்கு வைத்திருக்கும் விவசாயப் பெண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாக பவித்ரம் தொண்டு நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவுகளை தெரிவிப்பதற்காக, "விவசாய கூலிப் பெண்களின் நிலை' என்ற தலைப்பில் பவித்ரம் தொண்டு நிறுவனம் அண்மையில் மயிலாப்பூரில் கருத்தரங்கை நடத்தியது.

இந்த ஆய்வுகளை மேற்கொண்ட ஜாய்ஸ் திலகம் கூறியதாவது: 1200 பெண்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் வயது முதிர்ந்த பெற்றோர்களை விவசாய பெண்கள், முதியோர் இல்லத்துக்கு அனுப்ப தயாராக இல்லை.

பல பெண்கள் வீட்டில் கழிவறை இருந்தாலும்கூட பொது இடங்களில், குளக்கரை பகுதிகளை கழிவிடங்களாக பயன்படுத்துகின்றனர். விவசாய கூலி வேலை செய்யும் பெண்களில் 35.6 சதவீதம் பேர் மட்டுமே கல்வியறிவு உள்ளவர்களாக இருக்கிறார்கள். மேலும், 27.3 சதவீத பெண்களுக்கு மட்டும்தான் வங்கிக் கணக்கு இருக்கிறது என்றார் அவர். கருத்தரங்கில் கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கரசுப்ரமணியன், ஆடிட்டர் ஜி.நாராயணசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

## சர்க்கரை ஏற்றுமதி தொடரும்: மத்திய அமைச்சர் கே.வி. தாமஸ்



சர்க்கரை உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளதால், இந்தியாவிலிருந்து சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுவது தொடரும் என மத்திய அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.

இந்திய உணவுக் கழகத்தின் பிராந்திய அலுவலகம் மற்றும் சென்னை மாவட்ட அலுவலக திறப்பு விழா எழும்பூரில் திங்கள்கிழமை நடந்தது. இந்த விழாவில் மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் கே.வி.தாமஸ் புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

மத்திய அரசின் ஓர் அங்கமான இந்திய உணவுக் கழகம் 121 கோடி மக்களுக்கு உணவு தானியங்களை வழங்கும் ஒரே நிறுவனமாகும். சுதந்திரமடைந்த போது 40 கோடி மக்களை உள்ளடக்கிய இந்தியாவில் உணவு தானியக் கையிருப்பு வெறும் 6 வாரங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது.

அமெரிக்காவிலும், பர்மாவிலும் இருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் நமக்கு இருந்தது. தற்போது உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருக்கிறோம். வெளிநாடுகளுக்கு உணவு தானியங்களை ஏற்றுமதி செய்கிறோம்.

நடப்பாண்டு கோதுமை, அரிசி, சோளம் ஆகிய உணவு தானியங்களின் உற்பத்தி 24 கோடி மெட்ரிக் டன் அளவுக்கு உற்பத்தி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதி தொடரும்: சர்க்கரை உற்பத்தியைப் பொருத்தவரை நாம் தன்னிறைவு அடைந்திருக்கிறோம்.

கடந்த ஆண்டு 2.62 கோடி டன் சர்க்கரை உற்பத்தியானது. நடப்பாண்டு 2.5 கோடி டன்னுக்கும் அதிகமாக உற்பத்தி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நமது தேவை 2.2 கோடி டன் தான். ஆகவே, எஞ்சிய சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுவது தொடரும். சர்க்கரைச் சந்தையில் உள்ள தடைகள் அகற்றப்படும். இதனால், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும். நுகர்வோரும் பயனடைவர்

உணவுப் பாதுகாப்பு மசோதா: உணவுப் பாதுகாப்பு மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகளுடன் கலந்து பேசி மசோதாவை முழுமையாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால், நாட்டில் உள்ள 67 சதவீத மக்கள் அதாவது 82 கோடி மக்கள் இத்திட்டத்தால் பயன்பெறுவர். இச்சட்டத்தின்படி, மாதம் ஒரு குடும்பத்துக்கு 25 கிலோ உணவு தானியம் வழங்கப்படும். அரிசி கிலோ ரூ.3, கோதுமை கிலோ ரூ.2, இதர தானியங்கள் ஒரு கிலோ ரூ.1-க்கும் வழங்கப்படும்.

இச்சட்டத்தின் படி, குடும்பத்தின் தலைவராக பெண் அங்கீகரிக்கப்படுவார்.

அவரின் பெயரில் திட்ட உதவிகள் வழங்கப்படும். மேலும் தற்போதுள்ள குடும்பக் கட்டுப்பாட்டுச் சட்டப்படி 2 குழந்தைகளுக்கு மேல் உள்ள தாய்மார்கள் உணவு மானியத் திட்டத்தில் தகுதி பெறுவதில்லை. ஆனால், சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடன் விவாதித்து, இக்கட்டுப்பாட்டைத் தளர்த்தப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வங்கிக் கணக்கில் நேரடி மானியம் வழங்கும் திட்டத்தில் பொதுவிநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் உணவு மானியம் சேர்க்கப்படவில்லை. பொது விநியோக முறை கணினி மயமாக்கப்பட்ட பிறகே நேரடி மானியத்திட்டத்தின் கீழ் உணவு மானியம் வழங்கப்படும் என்றார் அவர்.

தமிழக அரசின் உணவு மற்றும் பொது விநியோகத்துறை செயலாளர் எஸ்.நிர்மலா பேசியதாவது:

இந்திய உணவுக் கழகத்துடன் இணைந்து தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. பருப்பு வகை தானியங்களுக்கு மத்திய அரசு தமிழகத்துக்கு அளித்து வந்த மானியம் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்து விட்டது. உடனடியாக மானியம் வழங்க மத்திய அரசு முன் வர வேண்டும்.

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சிலவகை தானியங்கள் இங்குள்ள மக்களால் அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை. அவற்றை வெளிமாநிலங்களில் விற்பனை செய்ய கொள்கை அளவிலான மாற்றம் செய்யப்பட வேண்டும். உணவு தானியங்களை இருப்பு வைப்பதில் அறிவியல் ரீதியான முறை பின்பற்றப்பட வேண்டும்.

போதிய தொழிலாளர்கள் இல்லாததால், தானியங்களை இருப்பு வைப்பதில் தாமதம் ஏற்படுவதால், இயந்திர மயமாக்கம் செய்யப்பட வேண்டும். இந்திய உணவுக் கழகம் மாநில அதிகாரிகளுக்கும் நவீன தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க வேண்டும். இதற்கு மத்திய அமைச்சகம் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், இந்திய உணவுக் கழக பொது மேலாளர் (தமிழகம்) தாமரைக்கண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**உணவு தானிய உற்பத்தி குறையாது**

மத்திய அமைச்சர் கே.வி.தாமஸ் செய்தியாளர்களிடம் கூறியது:

பருவமழை பொய்த்ததால் உணவு தானிய உற்பத்தி குறையாது. உணவு தானிய உற்பத்தி போதுமான அளவு இருக்கும். கவலைப்படத் தேவையில்லை.

பருப்பு உள்ளிட்ட சில வகை தானியங்களை மாநில அரசே நேரடி இறக்குமதி செய்து கொள்வது; அதற்கான மானியத்தை மத்திய அரசு அளிப்பது குறித்து அமைச்சரவையில் விவாதித்து முடிவெடுக்கப்படும்.

தமிழகத்துக்கான வறட்சி நிவாரண நிதி குறித்து நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பிறகு வழக்கமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு நிதி அளிக்கப்படும். நேரடி மானியத் திட்டத்தால், பொது விநியோகத் திட்டம் எவ்வகையிலும் பாதிக்கப்படாது. தொடர்ந்து உணவு தானியங்கள் வழங்கப்படும். கர்ப்ப காலத்தில் ஊட்டச்சத்து மிக்க உணவு பெண்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய, மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கப்படும். பருவமழை பொய்த்ததால் வறட்சி ஏற்பட்டுள்ளது என்றார்.

## விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்கும் முகாம்

கீழ்அருங்குணம் ஊராட்சியில் தமிழக அரசால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளுக்கான குடற்புழு நீக்க முகாம் அண்மையில் நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் நடைபெற்ற இம்முகாமில் கீழ்அருங்குணம், எய்தனூர் ஊராட்சியை சேர்ந்த 64 பயனாளிகளின் 256 ஆடுகள், குச்சிப்பாளையம், பரிசமங்களம், அரியிருந்தமங்களம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 500 ஆடுகளுக்கும் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. இம்முகாமிற்கு ஊராட்சி மன்ற தலைவர் அரசம்மாள் சுப்புராயன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் அன்பரசன் முன்னிலை வகித்தார். நெல்லிக்குப்பம் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் எம்.மகாலட்சுமி தலைமையில், பாலூர் கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் தி.இராஜமச்சேந்திரசோழன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் சாந்தி, ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் முகாம் பணிகளை மேற்கொண்டனர்.

## மதுரையில் பலத்த காற்றுடன் திடீர் கனமழை!

மதுரையில் திங்கள்கிழமை பகலில் வெயில் கொளுத்திய நிலையில் மாலையில் திடீரென கனமழை கொட்டியது. பலத்த காற்றும் வீசியது. ரயில் நிலையத்தில் சிக்னல்களில் பழுது ஏற்பட்டதால் பல மணி நேரம் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 3 வாரங்களாக அக்னி நட்சத்திரம் காரணமாக வெயில் கடுமையாக இருந்தது. மதுரையில் பகலில் வெப்பக்காற்று வீசும் அளவுக்கு வெயில் தாக்கம் காணப்பட்டது. எனினும் அவ்வப்போது மாலையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

திங்கள்கிழமை பகலில் மதுரை நகரில் வெயில் கொளுத்திய நிலையில் மாலையில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. சுமார் 30 நிமிடங்களுக்கும் மேலாக நகரில் பெய்த மழையால் பெரியார் பஸ் நிலையம், கோரிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மழையால் ரயில் நிலையத்தில் தண்டவாளத்தில் பெருமளவு தண்ணீர் தேங்கியது. பலத்த காற்று வீசியதால் சிக்னல்களில் தண்ணீர் புகுந்து அவை பழுதாயின. இதனால், ரயில்நிலைய இரு பகுதிகளிலும் சிக்னல்கள் கிடைக்காததால், ஆங்காங்கே ரயில்கள் நிறுத்தப்பட்டன. சில மணி நேரத்தில் தத்தனேரி பகுதியில் சிக்னல் பழுது நீக்கப்பட்ட போதும், எல்லீஸ் நகர் பகுதி சிக்னலும் பழுதானதால் போக்குவரத்து தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் மாலை சுமார் 5 மணியிலிருந்து குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில் நிலையத்தை விட்டு வெளியேற முடியாமல் இரவு 8 மணி வரை நிறுத்தப்பட்டிருந்தது. அதேபோல, செங்கோட்டை பயணிகள் ரயில் மயிலாடுதுறை-நெல்லை பயணிகள் ரயில் 3 மணி நேரத்துக்கும் மேலாக நிறுத்தப்பட்டிருந்தன. இரவு 8 மணிக்கு மேல் சிக்னல்கள் பழுது நீக்கப்பட்டு ரயில் போக்குவரத்து தொடங்கியது.

ரயில் நிலைய நுழைவுவாயில் பகுதியில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் அச்சாலையில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

அரசரடி மற்றும் கரிமேடு ஆகிய இடங்களிலும் மரங்கள் வேரோடு சாய்ந்து சாலைகளில் விழுந்து கிடந்ததால் போக்குவரத்து பலமணி நேரம் பாதிக்கப்பட்டது.

மதுரை அரசு மருத்துவமனையில் நிலைய மருத்துவ அலுவலர் இல்லம் உள்ளிட்ட பகுதிகளில் மரங்களும், மரக்கிளைகளும் முறிந்து விழுந்தன. ஏற்கெனவே மின்மாற்றி பழுதாகி பராமரிப்பு பணி நடந்துவருகிறது. இந்நிலையில் மழை காரணமாக மின்தடை ஏற்பட்டது. இதனால் மருத்துவமனையே இருளில் மூழ்கியது. மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள மரக்கிளைகளும் முறிந்தன. அரசரடி மற்றும் மேலமாரட் வீதியில் மரங்கள் சாய்ந்தன. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கனகவேல் காலனி பகுதியில் சாலையில் பெருகி மழைநீர் பல வீடுகளுக்குள் புகுந்தன.

மின்கசிவால் பேச்சியம்மன் படித்துறை, மேலபாண்டியன் தெரு ஆகிய இடங்களில் தீப்பற்றியதாக வந்த தகவலை அடுத்து, தீயணைப்புத் துறையினர் விரைந்து சென்று தீயை

அணைத்தனர். பீபீகுளம் மிலிட்டரி கேண்டீன் அருகே மரம் முறிந்து மின்கம்பியில் விழுந்ததால் முற்றிலும் அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நாராயணபுரம் சிவமணி தெருவில் மின் கம்பம் சாய்ந்ததால் அப்பகுதி முழுவதும் மின்தடை ஏற்பட்டதுடன் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டது.

மரம் விழுந்த இடங்களில் அவற்றை துண்டித்து அகற்றும் சாதனமுடன் கூடிய வாகனத்தை, தீயணைப்புத் துறையினர் பயன்படுத்தினர். சிறிது நேரமே பெய்த மழை மற்றும் வீசிய காற்றால் புயலில் பாதித்த நகரம் போல மதுரை அவதிப்பட்டது.

ஊரகப் பகுதிகளிலும் மழையுடன் காற்றும் வீசியதால் பல இடங்களில் மரங்கள் முறிந்தன. சில இடங்களில் வாழை உள்ளிட்ட மரங்கள் சாய்ந்தன.

## பழைய ஆயக்குடியில் விவசாயிகளுக்கு ரூ.88.4 லட்சம் வறட்சி நிவாரண நிதியுதவி

பழனி அருகே பழைய ஆயக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகளுக்கு ரூ. 88 லட்சத்து 48 ஆயிரம் வறட்சி நிவாரண நிதியாக வழங்கப்பட்டது.

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால், சென்னையைத் தவிர பிற மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அரசு அறிவித்தது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி மற்றும் சுற்றுப் பகுதிகளில் பருவமழை, கோடை மழையின்றி அணைகள் வறண்டு, கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது.

இதனால், பழனி மற்றும் சுற்றுப் பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கரில் விவசாயம் பாதிக்கப்பட்டு, ஏராளமான விவசாயிகள் நெல், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களை பயிரிட்டு இழப்பைச் சந்தித்துள்ளனர். எனவே, இதற்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்று விவசாய சங்கங்கள் கோரியதைத் தொடர்ந்து, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரம் வழங்க அரசு உத்தரவிட்டது.

பழனி சுற்றுப் பகுதிகளில் சுமார் 53,845 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதற்காக ரூ. 17 கோடியே 66 லட்சத்து 28 ஆயிரத்து 610 நிவாரண நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

பழனி அருகே பழைய ஆயக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வறட்சி நிவாரண நிதிக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு, சங்கத் தலைவரும், ஆயக்குடி பேரூர் செயலருமான கருப்புச்சாமி வரவேற்புரை வழங்கினார்.

பழனி ஒன்றியச் செயலர் ஆறுமுகம் முன்னிலை வகித்தார். துணைத் தலைவர் கன்னீஸ்வரி, ஆயக்குடி பேரூராட்சித் தலைவர் சுந்தரம், சங்க இயக்குநர்கள் மதிமுகம், விலங்கடியான், பெரியதுரை, பேரரசி, சாரதா, விஜயகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பழனி எம்.எல்.ஏ. வேணுகோபாலு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, விவசாயிகளுக்கு காசோலைகளை வழங்கினார். விழாவில், 1,275 விவசாயிகளுக்கு ரூ. 88 லட்சத்து 48 ஆயிரத்து 750 மதிப்பிலான காசோலைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், வட்டாட்சியர் இதாயத்துல்லா, வருவாய் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், நேர்முக உதவியாளர் பெரியசாமி, நிர்வாக அலுவலர் சுந்தரம் மற்றும் பலர் பங்கேற்றனர். சங்கச் செயலர் ரவி நன்றி கூறினார்.

## வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை: ஆட்சியரிடம் விவசாயிகள் புகார்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவி தங்களுக்கு வழங்கப்படவில்லை என வடமதுரை அருகில் உள்ள பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்த தமிழக அரசு, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கி உத்தரவிட்டுள்ளது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்திலும் வறட்சி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், வடமதுரை அடுத்துள்ள கொல்லப்பட்டி கிராமத்துக்கு உள்பட்ட கோப்பம்பட்டி பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள், மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை புகார் மனு அளித்தனர்.

பின்னர் இதுகுறித்து தினமணி செய்தியாளரிடம் அவர்கள் தெரிவித்தது: வறட்சி பாதித்த பகுதிகளை கணக்கெடுக்கும் போது கொல்லப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் எங்கள் பகுதிக்கு வராமல், ஊராட்சிமன்ற ஊழியர்கள் அளித்த தகவலின் பேரில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பதிவு செய்து கொண்டார். இதுகுறித்து அவரிடம் கேட்டபோது, உங்களின் நிலங்களும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

தற்போது, எங்கள் ஊராட்சிக்குள்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. நாங்கள் சென்று கேட்டபோது, உங்களுக்கான பட்டியல் வரவில்லை,

மே 23-ஆம் தேதி வந்து பாருங்கள் எனத் தெரிவித்தார். மீண்டும் மே 24-ஆம் தேதி சென்று கேட்டபோது, உங்களுக்கு நிவாரண உதவி கிடையாது எனத் தெரிவித்து விட்டார்.

எங்கள் பகுதியைச் சேர்ந்த சுமார் 100 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளோம். அரசு பதிவேட்டில் உள்ள எங்களின் நிலங்களுக்கு, முறையாக வரி வசூல் செய்யும் அதிகாரிகள், அரசு அறிவித்துள்ள நிவாரண உதவியை வழங்க மறுப்பதற்கான காரணம் தெரியவில்லை. எனவே மாவட்ட நிர்வாகம் எங்களுக்கு வறட்சி நிவாரண நிதி கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு மானியத்தில் பம்ப்செட்டுகள்

ஆர்எஸ் மங்கலம் வட்டார விவசாயிகளுக்கு சூரிய சக்தி மூலம் செயல்படும் பம்ப் செட்டுகள் மானியத்தில் வழங்கப்படவுள்ளன என வேளாண் உதவி இயக்குநர் கமாலுதீன் தெரிவித்தார்.

ஆர்எஸ் மங்கலம் பகுதியில் நெல் தவிர பருத்தி, கரும்பு, மிளகாய் போன்ற பணப் பயிரிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இப்பகுதி விவசாயிகளுக்கு தமிழக அரசு தற்போது சூரியசக்தி மூலம் செயல்படும் சோலார் பம்ப்செட்டுகள் மானிய விலையில் வழங்க முடிவு செய்துள்ளது. எனவே இப்பகுதி வட்டார விவசாயிகள் ரூ.10 ஆயிரத்துக்கான வங்கி வரைவு ஒலையுடன் வேளாண் உதவி இயக்குநர் அலுவலரிடம் முன்பதிவு செய்து கொள்ளலாம் என வேளாண் உதவி இயக்குநர் கமாலுதீன் தெரிவித்தார்.

## பவானியில் காற்றுடன் கனமழை: மரங்கள் விழுந்ததால் மின்சாரம் துண்டிப்பு

பவானி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் பலத்த காற்றுடன் திங்கள்கிழமை மாலை பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் மரங்கள் வேரோடு விழுந்தன. இதில், மின்கம்பம் முறிந்து விழுந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

திங்கள்கிழமை பிற்பகல் முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து, திடீரென பலத்த காற்றும், தொடர்ந்து மழையும் பெய்யத் தொடங்கியது.

சுமார் ஒரு மணி நேரம் பெய்த கனமழையில் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பலத்த காற்றால் புதிய பேருந்து நிலையத்தில் ஆட்டோ நிறுத்துமிடத்தில் இருந்த மரம் சாய்ந்தது. இதில், இரு ஆட்டோகள் சேதமடைந்ததோடு மின்கம்பமும் முறிந்து விழுந்தது.

இதனால், அப்பகுதியில் மின்சாரம் தடைபட்டது. அதேபோல் ôமராஜர் நகரில் மற்றொரு மரம் சாய்ந்தது. நீண்ட நாள்களுக்குப் பின்னர் பெய்த கனமழையால் பவானி மற்றும் சுற்றுப்புற மக்கள் சற்றே மகிழ்ச்சி அடைந்தனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 30.09 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 30.09 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 588 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 250 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 1.17 டி.எம்.சி.

இன்றைய நிகழ்ச்சி

பெரியமாரியம்மன் கோவில்: சிறப்பு பூஜை, காலை 7

### பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்து பயிற்சி

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் வட்டார வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அட்மா திட்டம் - வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை சார்பில் கால்நடை விவசாயிகளுக்கு பரண்மேல் ஆடு வளர்ப்பது குறித்த பயிற்சி மூலக்காடு கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற இதற்கான விழாவில் வெண்ணந்தூர் வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கு.சீனிவாசன் தலைமை வகித்தார். வட்டார கால்நடை உதவி மருத்துவர் லில்லி அருள்குமாரி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக மருத்துவர் ராஜசேகரபாண்டியன், கால்நடை உதவி மருத்துவர் நித்யா ஆகியோர் பங்கேற்று கால்நடை வளர்ப்பு உள்ள புதிய தொழில் நுட்ப யுத்திகள் குறித்துப் பேசினர்.

அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் மா.ரமேஷ், தொழில் நுட்ப வல்லுநர் தி.ஜமுனா ராணி ஆகியோர் அட்மா திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் பயிற்சிகள், அசோலா உற்பத்தி தீவன புல்கள் போன்றவை குறித்தும் பேசினர்.

விழாவில் கால்நடை விவசாயிகளுக்கு இடுபொருள்கள், மருந்துகள் வழங்கப்பட்டன.

### தீ விபத்தில் 200 நெல் மூட்டைகள் எரிந்து நாசம்

அறந்தாங்கி அருகே திங்கள்கிழமை நேரிட்ட தீவிபத்தில் ரூ. 2.60 லட்சம் மதிப்புள்ள 200 நெல் மூட்டைகள் எரிந்து நாசமடைந்தன.

அறந்தாங்கி அருகே பஞ்சாத்தியை சேர்ந்த சண்முகம் மகன் ராமநாதன் (40). இவர் தனது வீட்டுக்கு அருகேயுள்ள ஓட்டுவீட்டில் தலா 60 கிலோ எடை கொண்ட 600 நெல் மூட்டைகளை அடுக்கி வைத்திருந்தாராம்.

திங்கள்கிழமை மின் கசிவால் அந்தக் கட்டடத்தின் உள்ளே இருந்த நெல் மூட்டைகள் தீப்பிடித்து எரிந்தன.

இதில் 200 நெல் மூட்டைகள் எரிந்து நாசமானது. சேதமதிப்பு ரூ. 2.60 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்று கூறப்படுகிறது. அறந்தாங்கி தீயணைப்பு நிலையத்தினர் தீ மேலும் பரவாமல் அணைத்தனர்.

தீவிபத்து குறித்து வருவாய்த் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 19.32 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 19.32 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## மே 31-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மே 31-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் மேலும் தெரிவித்திருப்பது: இந்தக் கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குத் திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது. மேலும், விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்கலாம்.

இதில், கருத்துக்களை தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை மே 31-ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இருவர் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர்.

## 1,200 பேருக்கு விலையில்லா கறவை மாடுகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 1,200 பயனாளிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார் தமிழக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

தஞ்சாவூர் மாவட்டம், மருங்குளம் ஊராட்சியில் சனிக்கிழமை நடைபெற்ற தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் மற்றும் கால்நடை மருத்துவ முகாமைத் தொடக்கி வைத்து அவர் மேலும் பேசியது: தமிழக முதல்வரின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் இதுவரை 1,200 பயனாளிகளுக்கு ரூ. 4.22 கோடி மதிப்பில் விலையில்லா கறவைப் பசுக்களும், 10,733 பயனாளிகளுக்கு ரூ. 13.28 கோடி மதிப்பில் 42,932 விலையில்லா ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கால்நடை மருத்துவ முகாமில் 78 பயனாளிகளின் 312 விலையில்லா ஆடுகளுக்குக் குடற்புழு நீக்க மருந்து வழங்கப்பட்டுள்ளது. மேலும், 60 பயனாளிகளுக்குப் புல் கரணைகள், 15 பயனாளிகளுக்கு சூபாபுல் கரணைகளும் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் மூலம் ஏழை மக்கள் குறிப்பாக கிராமப்புற பெண்கள் பயனடைந்து வருகின்றனர் என்றார் வைத்திலிங்கம்.

மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன், தஞ்சாவூர் ஒன்றியக் குழுத் தலைவர் லட்சுமணன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) முகமதுகனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க மானியம்

பெரம்பலூர் மாவட்டத்தில் மீன் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க ரூ. 23 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

இதுகுறித்து ஆட்சியர் தரேஸ் அஹமதுவின் செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 181 கோடியில் 15,000 பண்ணைக் குட்டைகள் அமைக்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். மேலும் சென்னை மற்றும் நீலகரி மாவட்டங்கள் நீங்கலாக விவசாயிகள் பயனடையும் வகையில், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மீன் வளத்துறை மூலம் பண்ணைக் குட்டைகளில் மீன் உற்பத்தியை ஊக்குவிக்க தமிழக அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்ணைக் குட்டைகளைப் பயன்படுத்தி நீர் வற்றிய காலங்களில் பயிர்களைக் பாதுகாக்கவும், அவற்றில் மீன் வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாயை ஈட்டவும் வாய்ப்புள்ளது.

விவசாயிகள் நிலங்களில் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளில் மீன் வளத்துறை மூலம் மீன் வளர்க்க ஒரு பண்ணைக் குட்டைக்கு ஓராண்டிற்குத் தேவையான இடுபொருள் (மீன் குஞ்சு, உணவு, உரம்) மானியத் தொகையான ரூ. 23 ஆயிரம் வழங்கப்பட உள்ளது.

எனவே இத்திட்டத்தின் கீழ் பயனடைய பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலம் தேர்வு செய்யப்பட்ட பண்ணைக் குட்டை விவசாயிகள் தங்களது விண்ணப்பங்களை விவசாய நில விவரங்களுடன் மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் மாவட்டம் என்ற முகவரிக்கு நேரிலோ, அஞ்சல் மூலமோ 15 நாள்களுக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

## பால் விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும்

தில்லியில் பால் விலை உயர்த்தப்பட்டதைக் கண்டித்து ஜந்தர் மந்தரில் பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தில்லியில் ஏற்கெனவே பிரபலமான "அமுல்' பால் நிறுவனம் லிட்டருக்கு ரூ. 3 வரை பால் விலையை கடந்த மார்ச் மாதம் உயர்த்தியது.

இந்த நிலையில், தில்லி, தேசிய தலைநகர் வலயம் (என்சிஆர்) ஆகிய பகுதிகளில் திங்கள்கிழமை முதல் பால் விலையை லிட்டருக்கு ரூ. 3 வரை மதர் டயரி நிறுவனம் உயர்த்தியது.

பால் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும் கொள்முதல் விலை, மின் கட்டணம், பெட்ரோலிய பொருள்களின் விலை போன்றவை அதிகரித்து வருவதால் விலை உயர்த்தப்பட்டதாக மதர் டயரி நிறுவனம் கூறியுள்ளது.

விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜந்தர் மந்தரில் நடைபெற்ற போராட்டத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பள்ளி மாணவர்களும், தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

பாஜக கண்டனம்: பால் விலையைத் திரும்பப் பெற வேண்டும் என்று தில்லி பாஜக வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் டாக்டர் சம்பித் பத்ரா திங்கள்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை:

ஏற்கெனவே அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் தில்லிவாசிகள் அவதிப்பட்டு வருகின்றனர். பால் விலை உயர்வால் அவர்கள் மேலும் இன்னலுக்கு ஆளாவார்கள்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களின் விலையைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது அரசின் முக்கிய கடமை. அதைச் செய்வதில் தில்லி அரசு தோல்வியடைந்து விட்டது.

தில்லியில் மின் கட்டண, குடிநீர் கட்டண உயர்வால் பாதிக்கப்பட்ட நகரவாசிகள் ஏற்கெனவே போராடத் தொடங்கியுள்ளனர். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத தில்லி அரசு, மக்கள் வரிப் பணத்தைக் கொண்டு நகர் முழுவதும் அரசின் சாதனையை விளக்குவதாகக் கூறி விளம்பரம் செய்து வருகிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத ஷீலா தீட்சித் தலைமையிலான அரசுக்கு இனியும் ஆட்சியில் நீடிக்க உரிமையில்லை என்று சம்பித் பத்ரா கூறியுள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.05.2013 A.M**

---

## உலர் கலனை பயன்படுத்த தயங்கும் விவசாயிகள்

தேனி:சின்னமனூரில் உள்ள "சோலார்' உலர் கலனை பயன்படுத்த, விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

சின்னமனூரில் கூட்டுறவுத் துறை சார்பில், விவசாயிகள் பயன்பெறும் வகையில், 5 லட்சம் ரூபாய் மதிப்பில், சோலார் உலர் கலன் அமைக்கப்பட்டது. இதில் விவசாயிகள் தேங்காய்களை, கொப்பரை தேங்காய்களாக மாற்றுவது, கடலை, மிளகாய், எள், பாக்கு, மாட்டு தீவனம் உள்ளிட்ட விளை பொருட்களை பாதுகாப்பான முறையில் உலர்த்தி கொள்ளலாம்.

இம்முறையில் தூசி படியாது, பொருளின் நிறம் மாறாது.

இதற்கு விவசாயிகளிடம் இருந்து, மிகக் குறைந்த கட்டணம் வசூலிக்கப்பட்டது.

வறட்சி, நோய் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், விவசாயிகள் இந்த உலர்கலன்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை.

எனவே,விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை பாதுகாப்பான முறையில் உலர்த்துவதற்கு, இந்த கலனை பயன்படுத்திக்கொள்ளலாம். கட்டணம் விவசாயிகள் விருப்பப்படி கொடுக்கலாம், என கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## காய்கறி சாகுபடி பரப்பை அதிகரிக்க ரூ.60 கோடி மானியம்

தேனி:காய்கறி, பழவகைகளின் சாகுபடி பரப்பை அதிகரிக்க, மத்திய அரசு திட்டத்தில் 60 கோடி ரூபாய்க்கு மானிய உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போதுள்ள காய்கறிகள், பழவகைகள் சாகுபடி பரப்பை 20 சதவீதம் அதிகரிக்க, பரப்பு விரிவாக்க திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், நடப்பு ஆண்டில் தமிழகத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திராட்சை விவசாயிகளுக்கு, ஹெக்டேருக்கு 50 ஆயிரம் ரூபாய். திசுவாழைக்கு 31 ஆயிரத்து 200. கொட்டை முந்திரிக்கு 12 ஆயிரம். கிழங்கு வகை மலர்களுக்கு 45 ஆயிரம். மிளகாய்க்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

மானிய உதவிகள் பெற விரும்பும் விவசாயிகள், தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகங்களை அணுகலாம், என அறிவிக்கப்பட்டுள்ளது.

### வறட்சி நிவாரணம் பெறுவதற்கு 15 கி.மீ., அலையும் விவசாயிகள்

ஆர்.எஸ்.மங்கலம்:வறட்சி நிவாரணம் பெறுவதற்காக, ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் சீனாங்குடி விவசாயிகள் 15 கி.மீ., அலைய வேண்டி உள்ளதாக புலம்புகின்றனர்.

ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் சேத்திடல் ஊராட்சியில் முத்துபட்டிணம், சீனாங்குடி, கருங்குடி, எட்டியதிடல், மருதவயல், சேத்திடல் ஆகிய கிராமங்கள் உள்ளன. இதில் மருதவயல், சேத்திடல் கிராம விவசாயிகள் திருத்தேர்வளை கூட்டுறவு கடன் சங்கத்திலும், மற்ற கிராம விவசாயிகள் அதே ஊராட்சிக்குட்பட்ட முத்துப்பட்டினம் கூட்டுறவு கடன் சங்கத்திலும் வரவு, செலவு செய்து வருகின்றனர்.

முத்துபட்டினம் சங்கத்திற்கு உட்பட்ட சீனாங்குடி, முத்துபட்டினம், எட்டியதிடல், கருங்குடி ஆகிய கிராம விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணத்தொகை, 15 கி.மீ., தொலைவில் உள்ள திருத்தேர்வளை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

முத்துப்பட்டினம் விவசாயி கணேசன் கூறுகையில், ""திருத்தேர்வளை கூட்டுறவு கடன்சங்கத்தில் வறட்சி நிவாரணத்தொகை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. அங்கு சென்றால் நிவாரணத்தொகை கேட்டால், "இன்றுபோய் நளை வா' என அலைகழிக்கின்றனர்," என்றார்.

சீனாங்குடி விவசாயி வேலு கூறுகையில், ""எங்கள் பகுதியில் இருந்து 15 கி.மீ., தொலைவில் உள்ள திருத்தேர்வளை செல்வதற்கு பஸ் வசதி இல்லை. முத்துப்பட்டினம் சங்கத்திற்கு நிவாரணத்தொகையை வழங்க கோரி, கலெக்டரிடம் மூன்று முறை மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை," என்றார்.

திருவாடானை தாசில்தார் பழனியான்டி கூறுகையில், ""கிராமமக்களின் கோரிக்கையை ஏற்று தொகையை சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்திற்கு மாற்றி வழங்க, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது," என்றார்.

### கோடை மழை "சொதப்பல்' விவசாயிகள் "அப்செட்'

செஞ்சி:செஞ்சி பகுதியில் காய்ந்து வரும் பயிர்களை காப்பாற்ற கோடை மழையும் கைகொடுக்காமல் தூரலுடன் நின்றது விவசாயிகளை ஏமாற்றமடைய செய்துள்ளது.

கடந்த ஆண்டு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழை பொய்த்து போனதால் இந்த ஆண்டு செஞ்சி பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டது. விவசாய கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து

ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிட்டுள்ள கரும்பு, நெல் பயிர்கள் கருகுகின்றன.

கடந்த 15ம் தேதிக்கு பிறகு புயல் சின்னம் காரணமாக மழை பொழியும் என வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்திருந்த நிலையில் பலத்த காற்று வீசியது.

ஆனால் மழை இல்லாமல் போனது.

நேற்று முன்தினமும் விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக கோடை மழை பெய்தது. அப்போதும் செஞ்சி பகுதியில் மழை பெய்யாமல் லேசான தூரலுடன்

நின்றது.

மற்ற பகுதியில் அடுத்தடுத்து இரண்டு முறை மழை பெய்த நிலையில் செஞ்சி பகுதியில் காய்ந்து வரும் பயிர்களை காப்பாற்ற மழை பெய்யாதது விவசாயிகளை ஏமாற்றமடைய செய்துள்ளது.

## நெல் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

விலை உயர்வு காரணமாக வானூர் பகுதி விவசாயிகள் நெல் பயிரிடுவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

விவசாய வேலை ஆட்கள் கூலி உயர்வு, மின்சார பற்றாக்குறை, உரம் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாயத்தை விட்டு வேறு வேலை களுக்கு விவசாயிகள் மாறி வருகின்றனர்.

விவசாயம் மட்டுமே தெரிந்தவர்கள் சவுக்கை, மானவாரி பயிர் செய்

தனர்.

தற்போது நெல் விலை கணிசமாக உயர்ந்துள்ளதாலும் வியாபாரிகள் தங்கள் கிராமத்திற்கு வந்து நெல் கொள்முதல் செய்வதாலும் வானூர் பகுதியை சேர்ந்த கிளியனூர், உப்புவேலூர், கொஞ்சிமங்லம், தைலாபுரம், புதுக்குப்பம், எடச்சேரி, நல்லாவூர், காரட்டை, கொடூர் உள்ளிட்ட பகுதியில் விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் போர்வெல் மூலம் கிடைப்பதால் கோடை காலத்திலும் நெல் பயர் செய்வதில் ஆர்வம் காட்டிவருகின்

றனர்.

## மார்க்கெட் கமிட்டியில் காத்திருக்கும் விவசாயிகள்

திண்டிவனம்:திண்டிவனம் கமிட்டியில் விற்பனை செய்யும் பொருட்களுக்கு பணம் கிடைக்காததால் விவசாயிகள் நாள் கணக்கில் காத்திருக்கும் அவல நிலை உள்ளது.

திண்டிவனம் மார்க்கெட் கமிட்டிக்கு தினம் 50 க்கும் மோற்பட்ட கிராமங்களில் இருந்து மணிலா, நெல், கம்பு, கேழ்வரகு போன்ற விவசாய பொருட்களை விவசாயிகள் வாடகை வண்டிகளில் ஏற்றி

வந்து விற்கிறனர்.

விற்கும் பொருட்களை வாங்கும் வியாபாரிகள் ரூபாய் 15 ஆயிரத்திற்கு மேல் இருந்தால் ஒரு வாரம் வரை பணம் தராமல் இழுத்தடிப்பு செய்கின்றனர்.

விவசாயிகளிடம் இருந்து வாங்கும் பொருட்களுக்கு முதல் போடாமல் வாங்கிய பொருட்களை வேறு இடத்தில் அதிகலாபத்திற்கு விற்று லாபத்தையும் எடுத்து கொண்டு விவசாயிகளுக்கு பணத்தை வழங்குகின்

றனர்.

இதனால் விவசாயிகள் தினந்தோறும் கமிட்டி முன் காத்திருந்து செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

## தண்ணீர் இல்லாமல் காயும் கரும்பு பயிர்

சின்னசேலம்:சின்னசேலம் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்து வருகிறது.

சின்னசேலத்தில் கல்லாநத்தம், எலவடி, அம்மையகரம் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் கரும்பு பயிர் செய்துள்ளனர். பருவ மழை இல்லாததால் கிணற்று நீரை பயன்படுத்தி கரும்புபயிர் விவசாயம் செய்தனர். நிலத்தடி நீர் குறைவதாலும் ,கோடை மழை இல்லாததாலும் கரும்பு பயிர் காய்கிறது.

வறட்சி நிலவுவதால் குடிதண்ணீருக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. விவசாயிகள் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கேழ்வரகை உலர்த்துவதால் விபத்து ஏற்படும் அபாயம்

கண்டாச்சிபுரம்:கண்டாச்சிபுரம் அருகே நெடுஞ்சாலையில் கேழ்வரகை விவசாயிகள் உலர்த்துவதால் விபத்து அபாயம் உள்ளது.

கண்டாச்சிபுரம் பகுதியில் உள்ள விவசாயிகள் கேழ்வரகு மற்று தானியங் களை உலர்த்த தேசிய நெடுஞ் சாலையை பயன்படுத்துகின்றனர். இதனால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. குறிப்பாக அடுக்கம், கண்டாச்சிபுரம், மேல் வாலை, கீழ்வாலை பகுதி களில் அருகிலுள்ள நிலங்களில் இருந்து அறுவடை செய்த தானியங்களை டிராக்டர்களில் ஏற்றி வந்து உலர்த்துகின்றனர்.

இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது. விவசாயிகள் உளர் களத்தில் தானியங்களை உலர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சூறாவளி காற்றுக்கு வாழை மரங்கள் சேதம்

பெத்தநாயக்கன்பாளையம்: ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில், பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்ததால், வாழை மரங்கள் தார்களுடன் சாய்ந்தது.ஆத்தூர், தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம், வீரகனூர் பகுதியில், நேற்று முன்தினம், பலத்த சூறாவளி காற்றுடன் லேசான மழை பெய்தது. வேகமாக வீசிய காற்றுக்கு, ஆத்தூர், தலைவாசல், ஆறகளூர், வீரகனூர், கீரிப்பட்டி, மல்லியக்கரை, பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட வாழை மரங்கள் தாருடன் சாய்ந்தது.கிணற்று பாசனத்தை கொண்டு சாகுபடி செய்த வாழை மரங்கள், அடியோடு முறிந்து விழுந்ததால், விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.சூறாவளி காற்றில் சேதமடைந்த வாழை உள்ளிட்ட பயிர்களுக்கு, அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும் என, ஆத்தூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முட்டை விலை ஒரே நாளில் 8 காசு உயர்வு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 315 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, ஒரே நாளில், எட்டு காசுகள் உயர்ந்துள்ளதால் கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 307 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, எட்டு காசு உயர்த்தி, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை உற்பத்தி செலவுக்கு நிகராக முட்டை விலை ஏற்றம் கண்டிருப்பதால், கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 315, பெங்களூரு, 300, மைசூர், 303, ஹைதராபாத், 272, மும்பை, 301, விஜயவாடா, 275, கொல்கத்தா, 315, பர்வாலா, 286, டில்லி, 295.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை, 60 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 70 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## காய்கறிகள் விலை உயர்வு: உழவர் சந்தையில் கூட்டம் அதிகரிப்பு

தர்மபுரி: தர்மபுரியில் காய்கறிகள் விலை பல மடங்கு உயர்ந்துள்ள நிலையில், வெளி மார்க்கெட்டை விட குறைந்த விலைக்கு உழவர் சந்தையில் காய்கறிகள் கிடைப்பதால், மக்கள் கூட்டம் அலை மோதி வருகிறது.தர்மபுரி மாவட்டத்தில், பருவ மழை பொய்த்து போன நிலையில், இறவை பாசன சாகுபடியில் பயிர் செய்யப்படும் காய்கறிகள் உற்பத்தி, 40 முதல் 50 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதனால், காய்கறிகளின் விலை கடந்த இரண்டு மாதமாக பல மடங்கு

உயர்ந்துள்ளது.உள்ளூர் காய்கறிகளில் விலை, கிலோ, 20 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி விலை, 40 ரூபாய் முதல், 50 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. அனைத்து காய்கறிகளின் விலை பல மடங்கு உயர்ந்த நிலையில், பொது மக்கள் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படும், முள்ளங்கி, கத்தரி உள்ளிட்ட காய்கறிகளை அதிகம் பயன்படுத்த துவங்கியுள்ளனர்.வெளி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை அதிகமாக இருப்பதால், உழவர் சந்தைகளில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. கடந்த ஒரு மாதமாக தர்மபுரி உழவர் சந்தைக்கு காய்கறி வாங்குவோர் கடந்த காலங்களை விட, 40 முதல் 50 சதவீதம் அதிகரித்துள்ளது. நேற்று தர்மபுரியில் நடந்த வார சந்தையிலும் வழக்கத்தை விட மக்கள் கூட்டம், கூட்டமாக காய்கறிகளை வாங்கி சென்றனர். கடந்த சில நாட்களாக தர்மபுரியில் கோடை மழை பெய்து வரும் நிலையில், இறவை பாசன பகுதியில் மீண்டும் காய்கறி சாகுபடி சுறுசுறுப்படைய வாய்ப்புள்ளது. தொடரும் தென்மேற்கு பருவமழை விவசாயிகளுக்கு கை கொடுக்கும்பட்சத்தில், காய்கறிகளின் விலை கடந்த காலங்களை போல் குறைய வாய்ப்புள்ளது.

### தர்மபுரி மாவட்டத்தில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழையால், கோடை வெயில் உஷ்ணம் தணிந்தது. தொடர் மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.வெப்ப மண்டல பகுதியான தர்மபுரி மாவட்டத்தில், எந்தாண்டும் இல்லாத அளவுக்கு இந்தாண்டு, கோடை வெயில் வாட்டி எடுத்தது. அக்னி நட்சத்திரம் துவங்கும் முன்பே, 100 டிகிரிக்கு மேல் வெயில் அடித்து வந்தது. அக்னி நட்சத்திரம் துவங்கிய, கடந்த, 4ம் தேதி முதல் வாரத்தில் மிதமான வெயிலும், மத்திய வாரத்தில், 104 டிகிரி வரையில் அதிகபட்ச வெயில் அடித்து, மக்களை பெரும் அவதிக்குள்ளாக்கியது.இன்று (மே 18) அக்னி நட்சத்திரம் முடியும் நிலையில், கடந்த ஒரு வாரமாக மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ந்து வருகிறது. இந்தாண்டு கோடையில் அதிக பட்சமாக நேற்று முன்தினம் இரவு மழை பெய்தது. நேற்று முன்திமன் இரவு, 9 மணிக்கு துவங்கிய மழை, 45 நிமிடங்கள் வரையில் தொடர்ந்தது.மீண்டும் அதிகாலை, 12 மணியில் இருந்து மழை பரவலாக பெய்தது. இதனால், அக்னி நட்சத்திர வெயில் உக்கிரத்தில் இருந்த பூமி குளிர்ந்தது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இன்று அக்னி நட்சத்திரம் முடியும் நிலையில், வரும் வாரங்களில் தென்மேற்கு பருவமழை பெய்ய வாய்ப்பு இருப்பதால், கடந்த நாட்களில் இருந்து தண்ணீர் பிரச்னை தீர்வுக்கு வரும் என்ற நம்பிக்கை விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.தர்மபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பதிவான மழை அளவு விபரம் வருமாறு: அதிகபட்டசமாக அரூரில், 131 மி.மீ., தர்மபுரி 85, மாரண்டஹள்ளி 20, பாலக்கோடு 12, ஒகேனக்கல் 4.20, பாப்பிரெட்டிப்பட்டி, 3 மி.மீ., மழையளவு பதிவானது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.05.2013 A.M**

---

## தர்மபுரி மாவட்டத்தில் இடி&மின்னலுடன் பெய்த கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி,

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக கோடை வெயில் கொளுத்தியது. மே மாதத்தின் தொடக்கத்தில் இருந்து அக்னி வெயிலின் தாக்கம் அதிகரித்தது. வெயிலின் தாக்கத்தால் நீர்நிலைகள் வறண்டன. நிலத்தடி நீரின் அளவு மிகவும் குறைந்தால் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டது.

விவசாய பணிகளும் பாதிக்கப்பட்டன. இந்த நிலையில் கோடை வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வகையில் நேற்று முன்தினம் இரவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. சுமார் 2 மணி நேரம் இடி-மின்னலுடன் மழை நீடித்தது. சில பகுதிகளில் சூறாவளிக்காற்றுடன் கூடிய மழை சுழற்றியடித்தது.
தர்மபுரி மாவட்டத்தில் மொத்தம் 255 மில்லி மீட்டர் மழை பதிவானது. அதிகபட்சமாக அரூர்- 85 மி.மீ, தர்மபுரி-85 மி.மீ, ஒகேனக்கல் 20 மி.மீ மழை பதிவானது.

இந்த மழை காரணமாக குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை ஏற்பட்டு நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வறட்சியில் சிக்கி தவித்த விவசாய நிலங்களிலும் ஈரப்பதம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கரூரில் திடீர் மழை பொது மக்கள் மகிழ்ச்சி

கரூர்,

கரூரில் நேற்று மாலை திடீரென மழை பெய்ததால் பொது மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடும் வெய்யில்

கரூர் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக வெயில் கொடுமை மக்களை வாட்டி வதைத்தது. இதனால் மக்கள் வெளியே சென்றுவர மிகவும் சிரமப்பட்டனர்.
இந்தநிலை யில் நேற்று காலை முதல் மாலை வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. பின்னர் மாலை சுமார் 5 மணி அளவில் வானம் மேக மூட்டத் துடன் காணப்பட்டது. இதை யடுத்து குளிர்ந்த காற்று வீசியது.

திடீர் மழை

பின்னர் மாலை சுமார் 5-45 மணிக்கு குளிர்ந்த காற்றுடன் மழை பெய்யத்தொடங்கியது. இந்த மழை சுமார் 15 நிமிட நேரம் பெய்தது. இதனால் ரோடுகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

திருச்சி மெயின் ரோட்டில் சில இடங்களில் மழை நீர் அதிக அளவு தேங்கி கிடந்தது. இந்த திடீர் மழையினால் நேற்று கரூர் நகரம் குளிர்ந்தது.
அக்னி நட்சத்திரம் இன்று முடிவடைவதை முன்னிட்டு நேற்று கரூர் நகரில் நல்ல மழை பெய்ததால் பொது மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்த னர்.

## வறட்சியால் பாதிப்பு முந்திரி பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டுகோள்

ஆண்டிமடம்,

வறட்சியால் பாதிக்கப் பட்ட முந்திரி பயிர் களுக்கு வறட்சி நிவா ரணம் வழங்க வேண்டும் என்று ஆண்டிமடம் ஒன்றிய விவசாயிகள் முதல்-அமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள் ளனர்.

வறட்சியால் பாதிப்பு

ஆண்டிமடம் ஒன்றியம் முழுவதும் பல ஆயிரக்கணக் கான ஏக்கரில் விவசாயிகள் முந்திரி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். பொதுவாக முந்திரி பயிரில் பிப்ரவரி முதல் மே மாதம் வரை ஒரு ஏக்கருக்கு 450 கிலோ வீதம் முந்திரிக் கொட்டை விளையும்.

ஆனால் இந்த ஆண்டில் பிப்ரவரி மாதம் முதலிலிருந்தே கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததாலும், கடந்த ஆண்டு பருவ மழை தவறியதாலும், ஒரு ஏக்கர் முந்திரி பயிரில் ஒரு சில கிலோ முந்திரிக்கொட்டை கூட காய்க்கவில்லை. முந்திரி பயிரின் பருவ காலத்தில் பூக்கள் பூத்து காய்க்கும் முன் பாக வெயிலின் தாக்கத்தால் பூக்கள் கருகின.

நிவாரணம் வேண்டும்

மரத்தின் இலைகள் பழுத்து நாளுக்கு நாள் உதிர்ந்து பட்ட மரங்களாக காய்ந்த நிலையில் உள்ளன. கோடைக்காலத்தில் அதிக மகசூலை தரக்கூடிய முந்திரி மரங்களே இந்த ஆண்டு நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால் வெப்பத்தை தாங்க முடியாமல் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. இதனால் விவசாயிகள் நஷ் டமடைந்து கடனில் மூழ்கி உள்ளனர்.

டெல்டா பாசன விவசாயி களுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்க உத்தரவிட்ட முதல்-அமைச்சர் ஜெயலலிதா முந்திரி பயிர் விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணமும், எதிர் காலத்தில் முந்திரி பயிர் அழி யாமல் இருக்க விவசாயிகளுக்கு இலவச முந்திரி கன்றுகளும் வழங்க வேண்டும் என ஆண்டி மடம் ஒன்றிய விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முகூர்த்த நேரம் என்பதால் வாழை இலை கடும் விலை உயர்வு ஒரு கட்டு ரூ.1,800க்கு விற்கப்படுகிறது

பாகனேரி,

முகூர்த்த நேரம் என்ப தால் வாழை இலை கடும் விலை உயர்ந்துள்ளது. ஒரு கட்டு ரூ.1,800க்கு விற் கப்படுகிறது.

வாழை இலை உற்பத்தி

காரைக்குடி அருகே உள்ள பாகனேரி, துருபும்புபட்டி, ஆல விழாம்பட்டி, சடையம் பட்டி, மதகுபட்டி, பொய்யா மனிப்பட்டி, ஆகிய பகுதிகளில் பல ஏக்கர் கணக்கில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. இந்த வருடம் போதிய மழை பெய் யாததால் பெரும்பாலான விவசாயிகள் அந்த வாழை பயிரை காப்பாற்ற முடிய வில்லை.

இந்த நிலையில் விசேஷ முகூர்த்த மாதமானதால் பல ஊர்களில் திருமண நிகழ்ச்சி களும், கோவில் திருவிழாக் களும் நடைபெற்று வருகிறது. விழா சமயங்களில் விருந்து வைப்பதற்கு வாழைஇலை முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கிடையில் வாழை இலைக்கு கடும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

சாதரணமாக 200 இலை கொண்ட ஒரு கட்டு ரூ.200க் கும், 150 இலை கொண்ட கட்டு ரூ.150க்கும் விற்பனை யாகி வந்த வேளையில் கொஞ்சம் தட்டுபாடு ஏற்படும் சமயங்களில் இதே கட்டின் விலை சற்று அதிகமான விலை யாக ரூ.500க்கும், ரூ.375க்கும் விற்பனையாகி வந்தது.

ஒரு கட்டு ரூ.1800

தற்சமயம் இந்த நிலைமாறி 200 இலை கொண்ட கட்டு ரூ.1500ல் இருந்து ரூ.1800 வரை யிலும், 150இலை கொண்ட கட்டு ரூ.1125ல் இருந்து ரூ.1200 வரையிலும், அதிரடியான, விலையேற்றத்துடன் விற் பனை யாவதால் விழா குழுவி னர்கள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

அத்துடன் வாழை இலை கிடைக்காமலும் தவித்து வருகின்றனர்¢. வியா பாரி களோ வாழை பயிரிட்ட தோட்டங்களை கண்டு பிடித்து நேரிடையாக சென்று வாழை இலைகளை கொள் முதல் செய்து சந்தைகளுக்கு கொண்டு சென்று லாபம் அடைந்து வருகின்றனர்.

இது குறித்து இலை வியா பாரிகள் பாகனேரி அன்பு, தாமரைப்பட்டி செல்வம், வெள்ளஞ்சம்பட்டி அய்ய னார் ஆகியோர் கூறும்போது, எப்போதும் காணாத அள விற்கு வாழை இலை விலை ஏறியுள்ளது, மிகவும் தட்டு பாடாகவும் உள்ளது. ஆகை யால் நாங்கள் வாழை பயி ரிட்டுள்ள தோட்டங்களை தேடிச்சென்று நேரிடையாக வாங்கி விற்பனை செய்கின் றோம். இதனால் விவசாயி களுக்கு சற்று சிரமம் குறை கின்றது. அதேநேரம் நுகர் வோருக்கும் பொருள் கிடைத்த திருப்தி கிடைத்து விடுகிறது என்று கூறினர்.

அத்துடன் எங்கள் வாழ் நாளில் வாழை இலைக்கு இப்படியரு விலை ஏற் றத்தை கண்டதில்லை என்றும் கூறினர்.

## சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் கரும்பு கிரைய தொகையை உடனே வழங்க வேண்டும் சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தல்

சிவகங்கை,

சர்க்கரை ஆலை நிர் வாகத் தினர் கரும்பு கிரைய தொகையை உடனே வழங்க வேண்டும் என்று சிவகங்கை, ராம நாதபுரம் மாவட்ட கரும்பு விவசாயிகள் வலி யுறுத் தியுள்ளனர்.

கிரையதொகை

சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட கரும்பு விவசாயிகள் சங்கத்தின் செயலாளர் ரகு நாதன் சிவகங்கையில் நிருபர் களிடம் கூறியதாவது:-

சிவகங்கை படமாத்தூரில் இயங்கி வரும் சர்க்கரை ஆலைக்கு கடந்த 25 ஆண்டு களாக விவசாயிகள் கரும்பு பயிறு செய்து வழங்கி வருகின் றனர். கடந்த 2 ஆண்டுகளாக ஆலையில்

இருந்து கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண் டிய கரும்பு கிரைய தொகை ரூ.25 கோடி தர வில்லை. மேலும், 2 ஆண்டாக வங்கிக்கு செலுத்த வேண்டிய பயிர் கடன் தொகை ரூ.40 கோடியை ஆலய நிர்வாகம் விவசாயிகளிடம்பிடித்தம் செய்துள்ளனர். ஆனால் அந்த தொகையை வங்கிக்கு செலுத்தவில்லை.

இதனால் விவசாயிகள் மீண் டும்பயிர் கடன் பெற முடியாத நிலை உள்ளது. இது தொடர் பாக நடத்தப்பட்ட பல்வேறு பேச்சுவார்த்தைகளிலும் ஒப்பு கொண்டப் படி எந்த கோரிக் கையையும் ஆலைநிர்வாகம் நிறைவேற்றவில்லை. எனவே கரும்பு விவசாயிகளின் நலனை கருதி அடுத்த கட்ட மாக எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம் வருகிற 29-ந்தேதி சிவகங் கையில்உள்ள இந்திய கம்யூ னிஸ்டு கட்சி அலுவலகத்தில் விவசாய சங்க மாநில தலைவர் குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

அடுத்த கட்ட போராட்டம்

இந்த கூட்டத்தில் கோரிக்கை களை நிறைவேற்றுவது தொடர்பாக நடத்தப்பட உள்ள போராட்டம் குறித்து முடிவு செய்யப்படும். இவ் வாறு அவர் கூறினார். பேட்டியின் போது உடன் துணை செயலாளர்கள் உடை யப்பன், சேதுராமன் ஆகி யோர் இருந்தனர்.

## ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் முருங்கைக்காய் விலை தொடர்ந்து வீழ்ச்சி விவசாயிகள் பரிதவிப்பு

ஆண்டிப்பட்டி,

ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் கடந்த சில நாட்களாக முருங்கைக்காய் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

முருங்கைக்காய் சாகுபடி

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி தாலுகாவில் டி.சுப்பு லாபுரம், சேடப்பட்டி, சிலுக்கு வார்பட்டி, கொண்டம நாயக் கன்பட்டி, திம்மரசநாயக் கனூர், கணவாய் பகுதிகள், ஆத்தங்கரைப்பட்டி, கண்ட மனூர், துரைச்சாமிபுரம், டாணாத்தோட்டம், அய்ய னார்புரம், கொம்புக்காரன் புலியூர்,பாலூத்து, சிதம்பர விலக்கு, சிறப்பாறை, குமணன் தொழு ஆகிய பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் முருங்கை சாகு படி செய்யப்பட்டுள்ளது. கோடைக் காலத்தில் முருங்கைக்காய் விளைச்சல் அதிகரிக்கும். மேலும் விலை யும்அதிகரித்து காணப்படும்.

இந்த ஆண்டு கோடைக் காலத்தில் அவ்வப்போது மழை பெய்ததால் முருங்கைக் காய் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக முருங்கைக்காய் விலையும் குறைவாகவே காணப் பட்டது. இதற்கிடையே கடந்த சில வாரங்களாக ஓரளவு விலை உயர்ந்து காணப் பட்ட முருங்கை விலை தற்போது மீண்டும் சரிந்துள்ளது.

விலை சரிவு

ஆண்டிப்பட்டி வட்டாரத் தில் தற்போது ஒருகிலோ முருங்கைக்காய் தரத்திற்கு தகுந்தாற்போன்று ரூ.6 முதல் ரூ.10-க்கும் விற்பனை செய்யப் படுவதால் முருங்கைக் காய் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். இந்த பகுதியில் விளையும் முருங் கைக் காய்களை மொத்த வியாபாரிகள் விளை நிலங் களுக்கே நேரில் வந்து கொள் முதல் செய்து வந்தனர்.

இந்நிலையில் விலை வீழ்ச்சி அடைந்ததால் மொத்த வியாபாரிகள் முருங்கைக் காய்களை கொள்முதல் செய்ய வருவதில்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர்.
இதனால் முருங்கைக் காய்களை விவசாயிகளே நேரடியாக சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். தற்போதுள்ள விலை விவசாய செலவுகளுக்கே போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர். குறைந்தபட்சம் கிலோ ஒன்றிற்கு ரூ.15 முதல் ரூ.20 விலை அதிகரித்தால்தான் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும் என்று கவலையுடன் தெரிவித்தனர்.

## ஆண்டிப்பட்டி பகுதியில் வறண்ட கிணற்றில் ஆழ்துளை கிணறு அமைக்கும் விவசாயிகள் நிலத்தடி நீர்மட்டம் குறைவு எதிரொலி

ஆண்டிப்பட்டி,

ஆண்டிப்பட்டிபகுதியில் பருவமழை மற்றும் கோடை மழை பொய்த்த தன் எதிரொலி யாக நிலத் தடி நீர்மட்டம் குறைந்து விட்டது. இதனால் வறண்டு போன விவசாய கிணற்றில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நிலத்தடி நீர்மட்டம் சரிவு

தேனி மாவட்டத்தில் வட கிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யாத காரணத்தால் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் வறட்சி நிலவு கிறது. மேலும் கோடை மழை இல்லாத காரணத்தால் நீர் நிலைகள்அனைத்தும் வறண்டு காணப்படுகிறது. இதனால் விவசாயம் உள்ளிட்ட பல் வேறு பணிகள் பாதிக்கப் பட்டுள்ளது. கால் நடை களுக்கு பசுந்தீவன தட்டுப் பாடும் ஏற் பட்டுள்ளது.

வறட்சியான பகுதியான ஆண்டிப்பட்டி பகுதியில் போதுமான மழை பெய்யாத நிலையில் அப்பகுதியில் நிலத் தடி நீர்மட்டம் Ôகிடு,கிடுÕ வென குறைந்துள்ளது. இந்த பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 70 அடி முதல் 120 அடி வரை யில் காணப்பட்ட தண்ணீர் தற்போது 300 அடிக்கும் கீழே சென்று விட்டதாக பொது மக்கள் கூறுகின்றனர். ஆண் டிப் பட்டி, சில்க்குவார்பட்டி, ராஜ கோபாலன்பட்டி, அணைக் கரைப்பட்டி, புதூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதி களில் உள்ள விவசாய கிணறுகளில் தண்ணீர் மிகவும் குறைந்த அளவே காணப்படு கிறது.

ஆழ்துளை கிணறுகள்

மழை ஏமாற்றியதால் ஆண்டிப் பட்டி சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஏராளமான விவசாய கிணறுகள் அடியோடு வறண்டு விட்டது. இந்த கிணறுகளில் உள்ள ஊற்றுகளில் தண்ணீர் மிகவும் குறைந்த அளவே காணப் படுகிறது. இதனால் விவசாய பணிகள் அடியோடு பாதிக் கப்பட்டுள்ளது.

மேலும் தங்களின் பயிர்களை காப் பாற்ற விவசாயிகள் நிலத்தில் உள்ள கிணற்றுக்குள் ஆழ்துளைகிணறுகள் அமைக்கும் பணியில் ஈடு பட்டுள் ளனர். ஆனால் பெரும் பாலான இடங்களில் 400 அடி ஆழத்திற்கு ஆழ் துளை கிணறு அமைத்தும் தண்ணீர் கிடைக்கவில்லை. தென்மேற்கு பருவ மழை பெய்து இப்பகுதியில் உள்ள குளங்கள், கண்மாய்கள் மற்றும் வைகை ஆற்றில் நீர்வரத்து தொடங்கினால் மட்டுமே இந்த விவசாய நிலங்களில் தண்ணீர் மட்டம் அதிகரிக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.